

# *மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் மீளாய்வு*

1928 சனவரி மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் 83 ஆவது செயலாற்றுகை அறிக்கையாகும். இத்திணைக்களத்தின் பிரதான பணிகளாக மோட்டார் வாகனங்களை புதிதாக பதிவுசெய்தல், உடைமை மாற்றம் செய்தலை பதிதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் துணை பணிகளாக மோட்டார் வாகனங்கள் தொடர்பில் தொழினுட்ப சேவை, வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான நடவடிக்கைகள், புகைக் கசிவு தரத்தை ஒழுங்குபடுத்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

2011 ஆம் ஆண்டில் 525,421 மோட்டார் வாகனங்கள் புதிதாக பதிவுசெய்யப்பட்டதுடன் அதன் பெறுபேறாக குறித்த ஆண்டு முடிவடையும்போது இலங்கையில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 4,479,732 ஆக இருந்தது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன உடைமை மாற்றல்களின் எண்ணிக்கை 288,784 ஆவதுடன் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 305,985 ஆகும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளை விரைவாகவும் மக்களின் உயர்ந்த பாராட்டுதலுடனும் நிறைவேற்றும் பொருட்டு நிறுவனத்தின் பதவிநிலை அலுவலர்கள் உள்ளிட்ட சகல பதவியினர்களும் அர்ப்பணத்துடன் சேவையாற்றியதுடன், திணைக்கள சேவைகளைப் போன்றே உட்கட்டமைப்பு சேவைகளையும் மேம்படுத்தும் முகமாக அவர்களுக்கு வழிகாட்டல்களை பெற்றுக்கொடுத்த போக்குவரத்து அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சகல அமைச்சு பதவியினர்களுக்கும், அரச கொள்கைக்கிணங்க தேவையான நிதியேற்பாடுகளை வழங்குவதன்மூலம் எங்களை வினைத்திறனாக செயற்படவைத்த கௌரவ போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.எச்.ஹரிஸ்சந்திர**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்

# பொருளடக்கம்


பக்க இல.

எமது தொலைநோக்கு ........ xi

எமது செயற்பணி ........ xi

எமது விழுமியங்கள் ........ xi

1. பதவியினர் ........ 36
   - 1.1 பதவிநிலை பதவியினர் ........ 36
   - 1.2 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ........ 37
   - 1.3 2011ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து இடமாற்றம் திணைக்களத்திற்கு பெற்றுவந்த பதவிநிலை அலுவலர்கள ........ 38
   - 1.4 இடமாற்றம் பெற்றுசென்ற பதவிநிலை அலுவலர்கள் ........ 38
2. பதவியினர் ஊக்கப்படுத்தல் ........ 38
   - 2.1 உள்ளகப் பயிற்சி ........ 38
   - 2.2 வெளியகப் பயிற்சி ........ 39
3. நிருவாக நடவடிக்கைகள் ........ 39
   - 3.1 ஆணையாளர் நாயக அலுவலகம ........ 39
   - 3.2 தாபனப் பகுதி ........ 40
   - 3.3 அபிவிருத்திப் பகுதி ........ 41
   - 3.4 பிரதான அலுவலகத்தின் பகுதிகள் ........ 41
   - 3.5 உப அலுவலகம் ........ 42
   - 3.6 மாவட்ட அலுவலகம ........ 42
4. திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் ........ 43
   - 4.1 வாகன உரிமையை புதிதாக பதிவுசெய்தல் ........ 43
     - 4.1.1 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை ........ 47
     - 4.1.2 முச்சக்கரவண்டி புதிய பதிவுக் கிளை ........ 48
     - 4.1.3 மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை ........ 50
   - 4.2 வாகன உரிமையை மாற்றுதல் ........ 51
   - 4.3 சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் ........ 55

4.4 தொழினுட்ப சேவைகள் ..................58

4.5 புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்துதல் ..................60

5. வருமானங்களும் செலவினங்களும் . . .............. 61

5.1 கணக்குக் கிளை ............... .61

5.2 சொகுசு வரிக் கிளை ................ 62

5.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை ................ 63

5.4 வருமானக் கணக்கு ............... 63

5.5 செலவினக் கணக்கு ................ 64

5.6 நிருமாணம் தொடர்பிலான மூலதனச்செலவு செயற்றிட்டங்கள். ............... 66

பின்னிணைப்பு 1. வாகனங்களை புதிதாக பதிவுசெய்யும் கட்டணங்கள்- 2011 . ……... 67

பின்னிணைப்பு 2. வாகன மாற்றல் கட்டணங்கள் - 2011 (ஒரேநாள் சேவை) ..…..... 69

பின்னிணைப்பு 3. வாகன மாற்றல் கட்டணங்கள் - 2011 (சாதாரண சேவை) ..…... 70

பின்னிணைப்பு 4. புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு ஏற்புடைய மிகை …….71

***மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்***

*இல.341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.*

*தொலைபேசி இல. 2694331-6 தொலைநகல் இல. 2694338*

*மின்னஞ்சல் : உ ழ அஅ..;அழவழசவசயககளை.பழஎ.டம*

*இணையத்தளம் -றறற. அழவழசவசயககளை.பழஎ.டம*


*ஆரம்பம் - 1928 சனவரி 01*

## எமது தொலைநோக்கு

சிறப்பான மோட்டார் வாகன ஒழுங்குபடுத்தல்மூலம் மக்களின் உயர் பாராட்டைப்பெறுதல்

## எமது செயற்பணி

ஊக்கப்படுத்தப்பட்ட பதவியினரின் கூட்டு முயற்சியையும் நவீன தொழினுட்பத்தையும் ஈடுபடுத்துவதன்மூலம் மோட்டார் வாகனச் சட்டத்தையும் ஏனைய சட்ட ஒழுங்குவிதிகளையும் சிறப்பாக செயற்படுத்துவதன்மூலம் மக்களின் உயர்ந்த பாராட்டு பொருட்டு அர்ப்பணித்து செயலாற்றுதல்.

## எமது விழுமியங்கள்

***அமைப்பு***

*மக்களின் உயர் பாராட்டு பயனுறுத்தன்மை*

***செயன்முறை***

*வினைத்திறன் மற்றும்*

***மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்***

***சேவைபெறுநர்***


*சேவைபெறுநர் திருப்தி*

***பணியாளர் குழாம்***

*ஊக்கப்படுத்தப்பட்ட பதவியினர் குழாம*

# DEPARTMENT OF MOTOR TRAFFIC

## ORGANIZATIONAL STRUCTURE




**DESIGNATION ABBR.**

**G.A/D.S:** GOVERNMENT AGENT / DISTRICT SECRETARY/DIVISIONAL SECRETARY
**Acct:** ACCOUNTANT
**L.O:** LEGAL OFFICER
**A.L.O: ASSISTANT LEGAL OFFICER**
**A.O.AD :** ADMINISTRATIVE OFFICER
**SEMV :** SENIOR EMV
**STO :** STATISTICAL OFFICER
**TA:** TECHNICAL ASSISTANT
**STAFF:** INVESTIGATION AND DEVELOPMENT ASSISTANTS + MANAGEMENT ASSISTANTS + DRIVERS+ KKS
**P.D :** PROJECT DIRECTOR (EMISION)
**D.C :** DEPUTY COMMISSIONER
**A.D.P.M :** ASSISTANT DATA PROCESSING MANAGER
**S.O :** SUPERVISING OFFICER
**EMV :** EXAMINER OF MOTOR VEHICLES
**A.L.O : ASSISTANTS LEGAL OFFICER**
**A.O.RR : ADMINISTRATIVE OFFICER RECORD ROOM**
**A.C :** ASSISTANT COMMISSIONER
**PRGM :** PROGRAMMER
**S.K :** STORES KEEPER
**STN :** STATISTICIAN
**A.O.DE : ADMINISTRATIVE OFFICER DEVELOPMENT**
**T.O : TECHNICAL OFFICER**
**T.O(E ): TECHNICAL OFFICER E**
**C.O : CORDINATING OFFICER**

**SUBJECT ABBR.:**

**D.L:** DRIVING LICENSE
**T:** TECHNICAL
**Tr. :** TRANSFER
**NP :** NUMBER PLATES
**E : EMMISON**
**NR :** NEW REGISTRATION
**RR1 :** RECORD ROOM 1
**IT :** INFORMATION TECHNOLOGY
**RR2 :** RECORD ROOM 2

## 1. பதவியினர்

### 1.1 பதவிநிலை பதவியினர் - 2011

- மோட்டார்வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் -திரு.பி.டி.எல்.தர்மப்பிரிய
- மேலதிக ஆணையாளர் (நிருவாகம்) -திரு.ஜீ.எஸ்.கே.கண்ணங்கர
- மேலதிக ஆணையாளர் (அபிவிருத்தி) -திரு.யு.கே.பண்டார
- பிரதி ஆணையாளர் (அபிவிருத்தி) -திரு.பீ.எச்.சீ.ரத்நாயக்க
- உதவி ஆணையாளர் (வர்த்தக வா.மா.கிளை) -திரு.கே.ரீ.எம்.எஸ்.சேரசிங்க
- உதவி ஆணையாளர் (வேரஹர) -திரு.ஜீ.எச்.ஆர்.குணவர்தன
- உதவி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) -செல்வி.சமந்தி சேனாநாயக்க
- உதவி ஆணையாளர் (கார் மாற்றல் கிளை) -திரு.பி.ஏ.பிரேமசிங்க
- உதவி ஆணையாளர் (முச்சக்கர வண்டி பு.ப.) -திருமதி கே.எச்.ஜே.எல்.சேனாரத்ன
- உதவி ஆணையாளர் (முச்சக்கர வண்டி மாற்றல் கிளை) -திரு.கே.எஸ்.விஜயகீர்த்தி
- உதவி ஆணையாளர் (மோட்டார்சைக்கிள் மாற்றல் கிளை)-திருமதி.ஆர்.ஏ.கே.ரேணுகா
- உதவி ஆணையாளர் (வேரஹர கிளை) -திரு.சீ.டப்.கே.தர்மசேன
- உதவி ஆணையாளர் (வர்த்தக வாகன பு.ப.) -திரு.என்ஆர்.கெகுலந்த
- உதவி ஆணையாளர் (வேரஹர கிளை) -திரு.ரீ.என்.த சில்வா
- பிரதான கணக்காளர் -திருமதி.டி.எஸ்.ஆர்.கே.குணதிலக
- கணக்காளர்(உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு) -திரு. ஆர்.கஹதுவஆரச்சி
- கணக்காளர் (கொடுப்பனவு) -திரு.டி.கே.எம்.ஆர்.குமாரசிறி
- கணக்காளர் (வருமானம்) -திருமதி.ஐ.ஜீ.எஸ்.எஸ்.சிறிமாண்ண
- நிருவாக உத்தியோகத்தர்(கட்டுப்பாடு) -திரு.டி.எம்.குணதிலக
- நிருவாக உத்தியோகத்தர்(அபிவிருத்தி) -திருமதி.டி.டிப்.எஸ்.என்.சில்வா
- உதவி தரவு முறைவழியாக்கல் முகாமையாளர் -திரு.பீ.டப்.பீ.பி.ஈரியகம
- சிரேட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் -திரு.எஸ்.ஏ.பிரேமரத்ன
- கணனி செய்நிரலர் -திரு.கே.கே.ஆர்.சமரவீர

**1.1 பதவியினர் தகவல்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் -2011**

**1.1.1 அட்டவணை**

| பதவிப்பெயர் | உரிய சேவை | பதவியணி(2011.12.31) | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரித்த | உள்ளபடி | வெற்றிடம் |
| ஆணையாளர் நாயகம் | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| மேலதிக ஆணையாளர் (நிருவாகம்) | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| மேலதிக ஆணையாளர் (அபிவிருத்தி) | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| பிரதி ஆணையாளர் | இலங்கை நிருவாக சேவை | 03 | 01 | 02 |
| பிரதி ஆணையாளர் (தொழினுட்பம்) | இலங்கை நிருவாக சேவை | 01 | 00 | 01 |
| உதவி ஆணையாளர் | இலங்கை நிருவாக சேவை | 15 | 09 | 06 |
| உதவி ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | இலங்கை நிருவாக சேவை | 01 | 01 | 00 |
| உதவி ஆணையாளர் (தொழினுட்பம்) | இலங்கைதொழில்நுட்ப சேவை | 01 | 00 | 01 |
| பிரதான கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 01 | 01 | 00 |
| கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 03 | 03 | 00 |
| உதவி தரவு முறைவழியாக்கல் முகாமையாளர் | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| நிருவாக உத்தியோகத்தர் | அரச முகாமைத்துவ சேவை | 02 | 02 | 00 |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 | 00 | 02 |
| கணனி செய்நிரலர் | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| பிரதான மோட்டார் வாகனப் | இலங்கை தொழில்நுட்ப | 12 | 05 | 07 |
| முகாமை உதவியாளர் | அரச முகாமைத்துவ சேவை | 293 | 249 | 44 |
| மோட்டார் வாகனப் பரிசோதகர் | இலங்கைதொழில்நுட்ப சேவை | 118 | 61 | 57 |
| வரவுசெலவுத்திட்ட உதவியாளர் | சார்ந்த சேவை | 01 | 00 | 01 |
| சட்ட உதவியாளர் | சார்ந்த சேவை | 03 | 01 | 02 |
| புலனாய்வு, அபிவிருத்தி உதவியாளர் | சார்ந்த சேவை | 34 | 33 | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் (வீதிப் பாதுகாப்பு) | சார்ந்த சேவை | 25 | 25 | 00 |
| புலனாய்வு உதவியாளர் | சார்ந்த சேவை | 25 | 25 | 00 |
| மனித வள உதவியாளர் | சார்ந்த சேவை | 20 | 20 | 00 |
| அபிவிருத்தி உதவியாளர் | சார்ந்த சேவை | 215 | 15 | 200 |
| அபிவிருத்தி உதவியாளர் (தொழினுட்பம்) | சார்ந்த சேவை | 04 | 03 | 01 |
| கணக்கு உதவியாளர் | சார்ந்த சேவை | 03 | 03 | 00 |
| நிகழ்ச்சித்திட்ட தரவு கட்டுப்பாட்டாளர் | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| கணனி முறைமை இயக்குநர் | திணைக்கள சேவை | 03 | 02 | 01 |
| கணனி தரவுப் பதியுநர் | திணைக்கள சேவை | 10 | 09 | 01 |
| உதவி ஆவண பொறுப்பதிகாரி | அரச முகாமைத்துவ சேவை | 02 | 00 | 02 |
| திணைக்கள எழுதுநர்கள் | திணைக்கள சேவை | 87 | 82 | 05 |
| வரவேற்பாளர் | திணைக்கள சேவை | 01 | 01 | 00 |
| சாரதிகள் | சாரதி/ திணைக்கள சேவை | 09 | 09 | 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| காரியாலய காரிய சகாயகர் | காரியாலய சேவக சேவை | 71 | 69 | 02 |
| திணைக்கள தொழிலாளி | திணைக்கள சேவை | 42 | 28 | 14 |
| துப்புரவேற்பாட்டுத் தொழிலாளி | திணைக்கள சேவை | 06 | 02 | 04 |
| **மொத்த எண்ணிக்கை** | | **1019** | **665** | **354** |

### 1.3 2011ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்த பதவிநிலை அலுவலர்கள்:-

1. திருமதி ரீ.என்.த சில்வா - உதவி ஆணையாளர் (இ.நி.சே.வகுப்பு I) - 2011.07.01

2. திருமதி டி.டப்.எஸ்.என்.சில்வா - நிருவாக உத்தியோகத்தர் (அரச முகாமைத்துவ சேவை) - 2011.01.03

### 1.4 2011ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற பதவிநிலை அலுவலர்கள்:-

1. திரு டி.எஸ்.பீ.சேனாரத்ன - பிரதி ஆணையாளர் (இ.நி.சே.வகுப்பு I) - 2011.07.19

## 2. பதவியினர் ஊக்கப்படுத்தல்

### 2.1 உள்ளகப் பயிற்சி

| திகதி | வேலையரங்கு | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011.01.11-2011.01.12 | 2011ம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுவந்த அரச முகாமைத்துவ சேவை அலுவலர்கள் பொருட்டான பயிற்சித்திட்டம் | 30 |
| 2011.04.20-2011.04.25 | புதிய நியமனம் பெற்றுவந்த அரச முகாமைத்துவ சேவை அலுவலர்கள் பொருட்டான பயிற்சித்திட்டம் | 28 |

### 2.2 வெளியகப் பயிற்சி

| காலப்பகுதி | நிறுவனம் | பாடநெறி | பங்குபற்றிய அலுவலர்கள் |
|---|---|---|---|
| 2011.01.10-2011.01.14 | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி | மோட்டார் வாகன பரிசோதகர் பயிற்சி | 12 |
| 2011.01.22 | தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நிறுவகம் | கணனிப் பயிற்சிநெறி | 04 |
| 2011.02.07-2011.02.12 | மிலோதா நிறுவகம் | Government Payroll Management System | 02 |
| 2011.03.11 (ஒரு வருட) | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா | 01 |
| 2011.09.13 | Skill Development Fund Ltd. | Skills For Work Life | 02 |
| 2011.10.18-2011.10.19 | இலங்கை மன்ற நிறுவகம் | முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநெறி | 01 |

## 3. நிருவாக நடவடிக்கைகள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் நிருவாகக் கட்டமைப்பானது, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களை முதலாகக் கொண்டமைந்த நிருவாகக் கட்டமைப்பை உள்ளடக்கியதாகும். அதன் நடவடிக்கைகள், நாரஹேன்பிட்டி பிரதான அலுவலகத்தை மையமாகக்கொண்டு வேரஹர உப அலுவலகம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

முழு திணைக்கள நிருவாக நடவடிக்கைகள், ஆணையாளர் நாயக அலுவலகம், தாபனப் பகுதி, அபிவிருத்திப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 ஆணையாளர் நாயக அலுவலகம்

ஆணையாளர் நாயகம் : திரு.பி.டி.எல்.தர்மப்பிரிய
( இ.நி.சே.தரம் I)

சொந்த உதவியாளர் : திருமதி. எச்.எஸ்.அபேதுங்க

| **பதவியினர்** | | **எண்ணிக்கை** |
|---|---|---|
| அபிவிருத்தி உதவியாளர் (தொழினுட்ப) | : | 01 |
| வரவேற்பாளர் | : | 01 |
| காரியாலய காரிய சகாயகர் | : | 02 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பணிகள் பொருட்டு உதவுதல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும்.

### 3.2 தாபனப் பகுதி

| | |
|---|---|
| மேலதிக ஆணையாளர் | : திரு.ஜீ.எஸ்.கே.கன்னங்கர ( இ.நி.சே.தரம் I) |
| உதவி ஆணையாளர் | : திரு. கே.ரீ.எம்.எஸ்.சேரசிங்க |
| நிருவாக உத்தியோகத்தர் | : திரு.டப்.எம்.குணதிலக |
| மேற்பார்வையாளர் | : திரு.எம்.பிரேமசிறி |

| **பதவியினர்** | | **எண்ணிக்கை** |
|---|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | : | 13 |
| சாரதி | : | 08 |
| காரியாலய காரிய சகாயகர் | : | 07 |
| துப்புரவேற்பாட்டுத் தொழிலாளி | : | 04 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மொத்த பதவியினரின் தாபன, நிருவாக நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் அத்துடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பேணுதலும் பராமரித்தலும் என்பன இப்பகுதியின் பிரதான பணியாவதுடன், அதற்கமைய பதவியினர் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வூபெறுதல், சேவை நீடிப்பு வழங்கல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், ஆள்சார் கோப்புக்களை பேணுதல், அதற்கு மேலதிகமாக சம்பள ஏற்றத்தை அங்கீகரித்தல், பல்வேறு கடன் வகைகளை அங்கீகரித்தல், அக்ரஹார காப்புறுதிப் பட்டியல்களை கொடுத்துதீர்த்தல் போன்ற நிர்வாகம்சார் நடவடிக்கைகளாகவும் நீர், தொலைபேசி, மின்சார பட்டியல்களை தீர்த்தலும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளாகும்.

### 3.3 அபிவிருத்திப் பகுதி

| | |
|---|---|
| ஆணையாளர்(அபிவிருத்தி) | : திரு.யு.கே.பண்டார ( இ.நி.சே.தரம் I) |
| பிரதி ஆணையாளர் | : திரு.பீ.எச்.சீ.ரத்நாயக்க ( இ.நி.சே.தரம் I) |
| நிருவாக உத்தியோகத்தர் | : திருமதி டி.டப்.எஸ்.என் த சில்வா |
| மேற்பார்வையாளர் | : திருமதி ஜீ.சபுசந்திரி |

| **பதவியினர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| புலனாய்வு உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| அலுவலக தொழிலாளி | 01 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் சகல நிருமாண நடவடிக்கைகளை செயற்படுத்துதல், வெகுமதி மற்றும் ஊக்குவிப்புக்கொடுப்பனவு நிதியம் தொடர்பில் ஆரம்ப நடவடிக்கைகளை செயற்படுத்துதல், பணியாளர் ஊக்கப்படுத்தலுக்கான உள்ளக வெளியக பயிற்சி நடவடிக்கைகள், முன்னேற்ற மீளாய்வுகள், அமைச்சு மற்றும் பிற பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய சகல முன்னேற்ற அறிக்கைகள், வரவுசெலவுத்திட்ட அறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கைகள், செயல் திட்டங்களை தயாரித்தல், உற்பத்தித்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

### 3.4 பிரதான அலுவலகப் பகுதிகள்

1. ஆணையாளர் நாயக அலுவலகம்
2. தாபனக் கிளை
3. அபிவிருத்திக் கிளை
4. கணக்குக் கிளை
5. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கிளை
6. உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை
7. சட்டக் கிளை
8. சொகுசு வரிக் கிளை
9. பிரதான எழுதுநர் கிளை
10. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை
11. முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை

12. மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை
13. மோட்டார் கார் மாற்றல் கிளை
14. வர்த்தக வாகன மாற்றல் கிளை
15. லொறி மாற்றல் கிளை
16. பஸ், இட வாகன மாற்றல் கிளை
17. முச்சக்கர வண்டி மாற்றல் கிளை
18. மோட்டார் சைக்கிள் மாற்றல் கிளை
19. தொழினுட்பக் கிளை
20. இலக்க தகட்டுக் (கொழும்பு) கிளை
21. இலக்க தகட்டுக் (வெளிப்பிரதேச) கிளை
22. பதிவேட்டறை I
23. பதிவேட்டறை II
24. புள்ளிவிபரக் கிளை

### 3.5 உப அலுவலகம்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹர உப அலுவலகம், ஒரு பிரதி ஆணையாளர் மற்றும் இரண்டு உதவி ஆணையாளர்கள் ஆகியோர்களினால் நிருவகிக்கப்படுகின்றது. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பிலான சகல நடவடிக்கைகள் அத்துடன் வாகன சோதனை, நிறை சான்றிதழ் வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகள் இவ்வலுவலகம்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.6 மாவட்ட அலுவலகங்கள்

இதுவரையில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள், சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்ட செயலகங்களுடன் இணைக்கப்பட்ட அல்லது பிற குறித்த நிலப்பரப்பில் தாபிக்கப்பட்டுள்ள இந்த அலுவலகங்கள் பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவரின் கீழ் நிருவகிக்கப்படுகின்றன.

சாரதி அனுமதிப்பத்திரம் பொருட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல், அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு ஏற்புடைய எழுத்துமூல மற்றும் செயல்முறைப் பரீட்சைகளை நடாத்துதல் என்பன இந்த மாவட்ட அலுவலகங்களால் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பணிகளுக்கு மேலதிகமாக, ஒதுக்கப்பட்ட இலக்கத்தின் அடிப்படையில் மாவட்டத்துக்குரிய மோட்டார் சைக்கிள்களை புதிதாக பதிவுசெய்தல்,

மாவட்டத்தினுள் குறித்த மோட்டார் சைக்கிள் மாற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் , நிறைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தொழினுட்ப சேவைக்குரிய நடவடிக்கைகள், திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான மாற்றல்களுக்கு ஏற்புடைய சகல நடவடிக்கைகள் பொருட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

## 04. திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளை பிரதானமாக ஐந்து(05) வகுதிகளின் கீழ் பிரித்துக்காட்டலாம். அவையாவன:

1. ஓட்டக்கூடிய வாகனங்களை மோட்டார்வாகனச் சட்டதிட்டங்களுக்கமைய பதிவுசெய்தல்.
2. வாகன உரிமை மாற்றத்தை பதிவுசெய்தல்
3. திறன் சான்றிதழின் அடிப்படையில் சாரதிகள் பொருட்டு அனுமதிப்பத்திரம் வழங்கல்.
4. தொழினுட்ப சேவை
5. புகைக் கசிவு பரிசோதனை பணிகளை மேற்பார்வை செய்தல்.

### 4.1 வாகன உரிமையை புதிதாக பதிவுசெய்தல்

இலங்கையினுள் முன்னர் பதிவுசெய்யப்பட்டிறாத அதாவது இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றுசேர்க்கப்பட்ட வாகனங்களை முதன்முறையாக பதிவுசெய்தல் இதன்மூலம் கருதப்படும். வாகனத்துக்குரிய பதிவுச் சான்றிதழை வழங்கும்போது விண்ணப்பதாரர்கள், பூர்த்திசெய்யப்பட்ட MTA 02 விண்ணப்பப்படிவம், உரிய சுங்க ஆவணங்கள், உரிமையாளரின் சான்றுப்படுத்தப்பட்ட 02 புகைப்படங்கள், அடையாள அட்டையின் ஒளிப்படப்பிரதி என்பனவற்றுடன் வாகனத்தின் முன் மற்றும் பக்க தோற்றத்தை வெவ்வேறாகக் காட்டும் 02 புகைப்படங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுக்குரிய பதிவுக் கட்டணத்தை செலுத்தியதன் பிற்பாடு ஒரே நாளில் பதிவு நடவடிக்கைகளை முடித்து வாகனத்துக்குரிய பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும். வாகனத்துக்குரிய இலக்க தகடுகள் மூன்று (03) நாட்களுள் வழங்கப்படும்.

புதிதாக வாகனங்களை பதியும் நபர்களின் வசதி பொருட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி ஆகிய இரு நிறுவனங்களின் சேவையை திணைக்கள வளாகத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் அளிக்கப்பட்டிருப்பதுடன் முதலாவது வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு மேல் மாகாண மோட்டார் வாகன ஆணையாளர் அலுவலகத்தின் அலகு ஒன்றும் திணைக்கள வளாகத்தினுள் இயங்குகின்றது.

2011.12.31 ஆம் திகதியில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 4,479,732 ஆக இருந்தது. அப்பெறுமானம், 2010 ஆம் ஆண்டு இறுதிவரையில் இருந்த 3,954,311 நிலமையை விட 13.28% அதிகரிப்பாகும். 2011 ஆம் ஆண்டில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 525,421 ஆகும். 2010 ஆம் ஆண்டில் 359,243 ஆக இருந்த அப்பெறுமானத்துடன் ஒப்பிடுகையில் புதிய வாகனப் பதிவு 46.3% ஆகும். அந்த அதிகரிப்பை ஒப்பிடும்போது 2010ஆம் ஆண்டில் புதிய பதிவின் 76% அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமானமாகும். அறவிடப்பட்ட இறக்குமதி வரிச் சதவீதம் அதிகரித்தமை மற்றும் பதிவுக் கட்டணங்களில் இடம்பெற்ற அதிகரிப்பு என்பன குறித்த வீழ்ச்சிக்கு காரணங்களாக குறிப்பிட முடியும


2005 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வருடாந்தம் புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையையும் மொத்த வாகனங்களின் எண்ணிக்கையையும் கீழுள்ளவாறு எண்ணிக்கைரீதியாகவும் வரைபுரீதியாகவும் காட்டலாம்.

4.1.1 அட்டவணை :- வாகன எண்ணிக்கை

| **வருடம்** | **புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை** | **மொத்த வாகனங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2005 | 229,669 | 2,527,380 |
| 2006 | 300,522 | 2,827,902 |
| 2007 | 297,892 | 3,125,794 |
| 2008 | 265,199 | 3,390,993 |
| 2009 | 204,075 | 3,595,068 |
| 2010 | 359,243 | 3,954,311 |
| 2011 | 525,421 | 4,479,732 |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

4.1.1 வரைபடம்




இலங்கையில் புதிய வாகனப் பதிவை கருத்திலெடுக்கும்போது வாகன எண்ணிக்கையில் அதிகரிப்பானது வருடா வருடம் அதிகரிப்பைக் காட்டியபோதிலும், 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளினுள் வாகனப் பதிவில் வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் அது படிப்படியாக அதிகரித்து 2011 ஆம் ஆண்டில் இருந்த 525,421 வரை வளர்ச்சியடைந்தது.

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வாகன வகுதிகளின்படி, புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எட்டு(08) வாகன வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது, மோட்டார் கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், மோட்டார் பஸ், இரட்டை பயன்பாட்டு வாகனம், மோட்டார் லொறி, இட வாகனம் (திராக்டர்), இட வாகனம் (இழுவை) என்றவாறாகும். அந்தந்த வகுதிகளின் கீழ் 2011ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையும் அது 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையிலான வளர்ச்சி சதவீதமும் கீழுள்ள 4.1.2 அட்டவணைமூலம் காட்டலாம்.


4.1.2 அட்டவணை :- புதியப் பதிவு வாகன வகுதி

| **வாகன வகுப்பு** | **2010 திசம்பர் 31இல் வாகன எண்ணிக்கை** | **2011திசம்பர் 31 இல் வாகன எண்ணிக்கை** | **அதிகரிப்பு சதவீதமாக** |
|---|---|---|---|
| மோட்டார் கார் | 23,072 | 57,886 | 150.89% |
| முச்சக்கர வண்டி | 85,648 | 138,426 | 61.62% |
| மோட்டார் சைக்கிள் | 204,811 | 253,331 | 23.69% |
| மோட்டார் பஸ் | 2,491 | 4,248 | 70.53% |
| இரட்டை பயன்பாட்டு வாகனம் | 11,712 | 33,518 | 186.18% |
| மோட்டார் லொறி | 11,845 | 14,818 | 25.09% |
| இட வாகனம் (திராக்டர்) | 17,363 | 20,073 | 15.60% |
| இட வாகனம் (இழுவை) | 2,301 | 3,121 | 35.63% |
| **மொத்தம்** | **359,243** | **525,421** | **46.25%** |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

அட்டவணையின்படி, 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் 300.4% ஆக இருந்த மோட்டார் கார் புதிய பதிவு 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டில் அதிகரித்திருப்பது 150.89% சதவீதத்தினாலாகும். அது வளர்ச்சியின் சரிபாதி அளவிலான வீழ்ச்சியாகும். 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் 186.18% ஆல் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் அது 815.0% ஆல் வளர்ச்சியடைந்திருந்தது. மூன்றாம் இடத்தில் உயர் வளர்ச்சி விகிதாசாரத்தைக் காட்டுவது மோட்டார் பஸ் வாகன புதிய பதிவாகும். எனினும் அதுவும் முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் மந்தமான வளர்ச்சியைக் காட்டியதன் பெறுபேறாக மொத்த வாகன புதிய பதிவு 46.25% ஆக குறைந்த வளர்ச்சி விகிதாசாரத்தைக் காட்டுகிறது.

4.1.2 வரைபடம்





மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

வருடத்தினுள் புதிதாக பதிவுசெய்யப்படுகின்ற இந்த வாகனங்களை எரிபொருள் பயன்பாட்டின் அடிப்படையில் பிரதானமாக சில வகுதிகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவையாவன:


- பெற்றோல் பயன்படுத்தும் வாகனங்கள்
- டீசல் பயன்படுத்தும் வாகனங்கள்
- ஏனையன

2011 ஆம் ஆண்டில் மேற்படி வகுதிகளின் கீழ் புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களில் 431,823 பெற்றோல் பயன்படுத்தும் வாகனங்களாகவும், 85,540 வாகனங்கள் டீசல் பயன்படுத்தும் வாகனங்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஏனைய பாவனைகளின்படி 4,415 பெற்றோல்/மின்சார வாகனங்களாகவும் சிறிய அளவிலான 27 மின்சார வாகனங்களாகவும் 3,616 எரிபொருள் பயன்படுத்தாத வாகனங்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

4.1.3 வரைபடம்




4.1.4 வரைபடம்




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

2011 ஆம் ஆண்டில் இலங்கையினுள் புதிதாக பதிவுசெய்யப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்த நாடுகளை கருத்திலெடுக்கும்போது 525,421ஆக இருந்த புதிய பதிவு வாகன எண்ணிக்கையில் 413,741(79%)இந்தியாவிலிருந்தும் 58,369(11%) யப்பானிலிருந்தும் இறக்குமதிசெய்யப்பட்டன என்பதுடன் 32,930(6%)வாகனங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. குறித்த பெறுமானங்களை சதவீதமாக பகுப்பாய்வு செய்கையில் 78% ஆன பெருமளவு வாகனங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பதனைக் காணலாம். அத்தரவுகளை பின்வரும் வரைபுமூலம் சுருக்கமாக காட்டலாம்.

திணைக்களத்தில் வாகனங்களை புதிதாக பதிவுசெய்கையில் அந்த வாகன வகைகளின்படி மூன்று(03) பிரிவுகளின் கீழ் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. அவையாவன:

1. வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை.
   (கார், பஸ், லொறி, இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், சிங்கல் கெப், பிரய்முவர், திராக்டர், ஹர்ஸ், அம்பியுலன்ஸ்)

2. முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை.

3. மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை.

### 4.1.1 வர்த்தக வாகன புதிய பதிவுக் கிளை

| | |
|---|---|
| உதவி ஆணையாளர் | : திரு. என். ஆர்.கெகுலந்தல |
| மேற்பார்வையாளர் | : திரு.ஆர்.ஈஸ்வரலிங்கம் |

| **பதவியினர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 22 |
| புலனாய்வு, அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| புலனாய்வு உதவியாளர் | 04 |
| மனித வள உதவியாளர் | 01 |
| கணனி தரவுபதியுநர் | 01 |
| திணைக்கள எழுதுநர் | 03 |
| காரியாலய காரிய சகாயகர் | 04 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**

விசேட பணி வாகனங்கள், இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், மோட்டார் லொறி, மோட்டார் கார் மற்றும் முப்படைகளினால் கொள்வனவு செய்யப்படுகின்ற, அரச உடமையாக்கப்பட்டு ஏல விற்பனை செய்யப்படுகின்ற வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ் வழங்குவது இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும். இதற்கு மேலதிகமாக, 18, 19, 300, 301, 302 இலக்கம் கொண்ட பதிவு இலக்கங்களுடனான வாகனங்கள் பொருட்டு கட்டணங்களை அறவிட்டு ஆங்கில எழுத்துக்கள் வழங்குவது, அரைச் சொகுசு, இரட்டை பயன்பாட்டு சொகுசு வாகன வரி அறவிடுவதற்காக பதிவுசெய்தல் அத்துடன் அரச கொள்கையின் பிரகாரம் வாகனங்கள் பொருட்டு முன் இலக்கங்களை ஒதுக்குதல் மற்றும் அதற்காக கட்டணங்களை அறவிடுதலும் மேற்கொள்ளப்படுகிறது.

2011 ஆம் ஆண்டில் இப்பிரிவு, 114,905 மோட்டார் வாகனங்களை பதிவுசெய்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 119,163 ஆக இருந்ததுடன் அவ்வாண்டுடன் ஒப்பிடும்போது, 2011 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட புதிய வர்த்தக வாகனங்களின் எண்ணிக்கை 3.57% இனால் குறைவடைந்திருந்தது.

### 4.1.2 முச்சக்கர வண்டி புதிய பதிவுக் கிளை

உதவி ஆணையாளர் : திருமதி கே.எச்.ஜே.லங்காதரி சேனாரத்ன

மேற்பார்வையாளர் : திரு. எச்.விமலரத்ன

| **பதவியினர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 04 |

| | |
|---|---|
| புலனாய்வு உதவியாளர் | 02 |
| திணைக்கள எழுதுநர் | 04 |
| காரியாலய காரிய சகாயகர் | 01 |
| அலுவலகத் தொழிலாளி | 01 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**


இதற்கு முன் பதிவுசெய்திராத முச்சக்கர வண்டிகளை முதல்முறையாக பதிவுசெய்தல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும். இதற்கு மேலதிகமாக, தூதுவராலய அலுவலகங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் வாகன மாற்றலை பதிதல், அவ்வாகனங்களின் பதிவை இரத்துச்செய்தல், அவ்வாகனங்களை இந்நாட்டிலிருந்து அகற்றுவதற்கு ஏற்புடைய பணிகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

4.1.3 அட்டவணை :- 2005ம் ஆண்டிலிருந்து முச்சக்கர வண்டி புதிய பதிவின் போக்கு

| **வருடம்** | **புதிதாக பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2005 | 41,085 |
| 2006 | 64,466 |
| 2007 | 43,068 |
| 2008 | 44,804 |
| 2009 | 37,364 |
| 2010 | 85,648 |
| 2011 | 138,426 |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

4.1.3 வரைபடம்




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

### 4.1.3 மோட்டார் சைக்கிள் புதிய பதிவுக் கிளை

ஆணையாளர் : திரு.யு.கே.பண்டார

மேற்பார்வையாளர் : திரு.எஸ்.பீ.ரூபானந்த

| <u>பதவியினர்</u> | <u>எண்ணிக்கை</u> |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 19 |
| புலனாய்வு,அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| தரவு பதியுநர் | 01 |
| திணைக்கள எழுதுநர் | 01 |
| காரியாலய காரிய சகாயகர் | 02 |
| துப்புரவேற்பாட்டுத் தொழிலாளி | 01 |

<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>


இதற்கு முன் இலங்கையினுள் பதிவுசெய்திராத மோட்டார் சைக்கிள்களைப் புதிதாக பதிவுசெய்தல் இப்பகுதியின் பிரதான தொழிற்பாடாகும் என்பதுடன் மாவட்ட அலுவலகங்களில் மோட்டார் சைக்கிள் புதிய பதிவு பொருட்டு இலக்கங்களை வழங்குதல், மாவட்ட அலுவலகங்களில் பதிவுசெய்யப்படுகின்ற மோட்டார் சைக்கிள்களின் தரவுகளை கணனி முறைமைக்குள் சேர்த்தல், வடக்கு, கிழக்கு மாகாண, மாவட்ட அலுவலகங்களில் பதிவுசெய்து பிரதான அலுவலகத்துக்கு அனுப்பப்படுகின்ற MTA 02 படிவங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ்களை வழங்கி அனுப்பிவைத்தல் என்பன இப்பகுதியின் பிரதான தொழிற்பாட்டுக்கு மேலதிகமாக இடம்பெறுகின்றன.

4.1.4 அட்டவணை :- 2005ம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்ட புதிய மோட்டார் சைக்கிள் எண்ணிக்கையின் வளர்ச்சி

| **வருடம்** | **பதிவுசெய்யப்பட்ட புதிய மோட்டார் சைக்கிள்களின்** | **மொத்த வாகன எண்ணிக்கைக்கான** |
|---|---|---|
| 2005 | 130,696 | 1,265,514 |
| 2006 | 156,626 | 1,422,140 |
| 2007 | 182,508 | 1,604,648 |
| 2008 | 155,952 | 1,760,600 |
| 2009 | 135,421 | 1,896,021 |
| 2010 | 204,811 | 2,100,832 |
| 2011 | 253,331 | 2,354,163 |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

4.1.5 வரைபடம்




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

2011 ஆம் ஆண்டு முடிவடையும்போது புதிதாக பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 253,331 ஆக இருந்ததுடன் மற்றைய ஒவ்வொரு வருடத்திலும் போன்றே மோட்டார் வாகன எண்ணிக்கை பொருட்டு அதிக பங்களிப்பொன்று மோட்டார் சைக்கிள் புதிய பதிவுமூலம் அளிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் மொத்த மோட்டார் வாகன எண்ணிக்கை பொருட்டு மோட்டார் சைக்கிள்மூலம் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு 2,354,163 போன்ற உயர் பெறுமானமாகும். அது, மொத்த மோட்டார் வாகன எண்ணிக்கையில் 52.56% போன்ற உயர் அதிகரிப்பாகும். இந்த மோட்டார் சைக்கிள் புதிய பதிவு 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 23.69% அதிகரிப்பான போதிலும் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2010இல் அதிகரித்த 51.2% உடன் ஒப்பிடும்போது மந்தமான வளர்ச்சியைக் காட்டுகிறது.

## 4.2 வாகன உடைமை மாற்றம் செய்தல் (மாற்றல்)

வாகன மாற்றல் என்பதனால் பிரதானமாக கருதப்படுவது யாதெனில், மோட்டார் வாகனத் திணைக்களத்தில் முதல் முறையாக பதிவை மேற்கொண்டுள்ள சகல வாகனங்களின் உரிமை மாற்றத்தை பதிவுசெய்தலாகும். இந்த வாகன மாற்றல் பொருட்டு அந்தந்த வாகன வகையின்படி மாற்றல் ஏழு(07)பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது. அவையாவன:

- லொறி மாற்றல் பிரிவு
- கார் மாற்றல் பிரிவு
- வர்த்தக வாகன மாற்றல் பிரிவு
- முச்சக்கர வண்டி மாற்றல் பிரிவு
- மோட்டார் சைக்கிள் மாற்றல் பிரிவு
- பஸ் மற்றும் இட வாகன மாற்றல் பிரிவு

### 4.2.1 மாற்றல் பிரிவுகளின் தொழிற்பாடுகள்

இந்த ஒவ்வொரு பிரிவும் அந்தந்த பகுதிக்குரிய பொதுவான சேவைகளையும் ஒரேநாள் சேவை நடவடிக்கைகளையும் முறையாக நிறைவேற்றுவதுடன் இந்த சகல பகுதிகளினதும் தொழிற்பாடுகள் பொதுவாக பின்வருமாறு காட்டலாம்.

- ❖ மாற்றலை பதிவுசெய்தல்.
- ❖ சொத்தாண்மை உரிமை அல்லது அடகுடனான மாற்றலை பதிவுசெய்தல்.
- ❖ சொத்தாண்மை உரிமை அல்லது அடகினை ரத்துச்செய்து மாற்றலை பதிவுசெய்தல்.
- ❖ பதிவுச் சான்றிதழினதும் வாகன அடையாள அட்டையினதும் இணைப்பிரதிகளை வழங்குதல்.
- ❖ உரிய முறையில் மேற்கொள்கின்ற பௌதிக மாற்றங்களையும் ஆவணம்சார் மாற்றங்களையும் பதிவுச் சான்றிதழில் சேர்த்தல். உ-ம் : எந்திர இலக்கம், வர்ணம், முகவரி
- ❖ புதிய ஆங்கில எழுத்துடனான வாகனங்களின் இலக்க தகடுகளினதும் ஸ்ரீக்கர்களினதும் இணைப்பிரதிகள் வழங்கும் பொருட்டு தரவுகளை கணனியில் பதிதல்.
- ❖ உடைமை மாற்றம் பொருட்டு மாற்றல் கிளைக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள வாகனங்கள் பொருட்டு வருமான உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான MTA- 11 படிவத்தை சான்றுப்படுத்தி வழங்குதல்.
- ❖ சட்ட நடவடிக்கைகள் பொருட்டு தேவையான சான்றுப்படுத்தப்பட்ட கணனி பிரித்தெடுப்புக்களை வழங்குதலும் உரிய முறையில் கிடைக்கும் ஆட்சேபனைகளை குறித்துக்கொள்ளுதலும்.

### 4.2.2 மாற்றல் பகுதிகளின் அலுவலர் உள்ளடக்கம்

அந்தந்த மாற்றல்களுக்குரிய மேற்படி பணிகளை நிறைவேற்றும்போது உரிய பகுதியின் பதவியினர் பொறுப்புடன் குறித்த பணிகள் பொருட்டு கட்டுப்பட்டுள்ளதுடன், அந்தந்த மாற்றல் பிரிவுகளின் அலுவலர் உள்ளடக்கத்தை பின்வருமாறு சுருக்கமாக காட்டலாம்.

4.2.1 அட்டவணை:-உரிமை மாற்றல் கிளையில் பணி புரியும் உந்த்யோத்தர்களின் எண்ணிக்கை


| பிரிவு | பதவிநிலை அலுவலர் | மேற்பார்வையாளர் | புலனாய்வு, அபிவிருத்தி உதவியாளர் | தரவு/முறைமை பதியுநர் | அரச முகாமை உதவியாளர் | திணை. எழுதுநர் | கா.கா.ச./திணை. தொழி. |
|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள் மாற்றல் | திருமதி ஆர்.ஏ.கே.ரேணுகா (உதவி ஆணையாளர்) | திரு.ஏ.எம்.சோமரத்ன | 06 | 02 | 06 | 06 | 04 |
| வர்த்தக வாகன மாற்றல் | திரு கே.எம்.எஸ்.சேரசிங்க (உதவி ஆணையாளர்) | திரு பி.ஜீ.சிறிபால | 01 | - | 07 | 08 | 02 |
| லொறி மாற்றல் | திரு ஜீ.எஸ். கே. கன்னங்கர (மேலதிக ஆணையாளர்) | திரு கே.எம்.எல்.பி. ஹேரத் | 03 | - | 03 | 05 | 01 |
| கார் மாற்றல் | திரு ரஞ்சித் குணவர்தன (உதவி ஆணையாளர்) | திரு ஆர்.வி. உபாலி | 07 | - | 13 | 07 | 03 |
| முச்சக்கர வண்டி மாற்றல் | திரு கே.எஸ். விஜயகீர்த்தி (உதவி ஆணையாளர்) | திரு கே.பீ.பீ. பண்டார | 03 | - | 05 | 05 | 02 |
| பஸ்,இட வாகன மாற்றல் | திருமதி நிரோஷனி த சில்வா (உதவி ஆணையாளர்) | திரு டப்.கே. குமாரதாச | 01 | - | 02 | 03 | 01 |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

### 4.2.3 மாற்றல் பகுதிகளின் பணிகளின் முன்னேற்றம்

2011 ஆம் ஆண்டில் வாகன மாற்றல்களைக் கருத்திலெடுக்கும்போது மொத்த மாற்றலகளின் எண்ணிக்கை 288,784 ஆக இருந்தது. வாகன மாற்றல்களில் இடம்பெற்ற வளர்ச்சியின் போக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் வரைபு மூலம் காட்டலாம

4.2.1 வரைபடம் : வாகன மாற்றல்களின் போக்கு




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்


எண்ணிக்கை குறிப்புகளின்படி 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 245,768 மாற்றல் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 17.50% வளர்ச்சியைக் காட்டுவதன்மூலம் மொத்த மாற்றல் எண்ணிக்கையான 288,784 மட்டத்துக்கு அடைந்துள்ளது. அந்த வளர்ச்சி 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 20% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது மந்தமான வளர்ச்சியாகும். அந்த மாற்றல் எண்ணிக்கை அந்தந்த வாகன வகுதிகளின்படி பின்வரும் வேறுபடுத்தி காட்டலாம்.

4.2.2 அட்டவணை : வாகன மாற்றல் உள்ளடக்கம்

| **வாகன வகை** | **2010** | **2011** |
|---|---|---|
| லொறி மாற்றல் | 34,653 | 44,936 |
| கார் மாற்றல் | 51,490 | 66,297 |
| வர்த்தக வாகன மாற்றல் | 39,644 | 47,793 |
| முச்சக்கர வண்டி மாற்றல் | 57,348 | 63,194 |
| மோட்டார் சைக்கிள் மாற்றல் | 40,906 | 39,401 |
| பஸ் மாற்றல் | 14,366 | 17,720 |
| இட வாகன மாற்றல் | 7,361 | 9,443 |
| **மொத்தம்** | **245,768** | **288,784** |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

4.2.2 வரைபடம்




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

2010 ஆம் ஆண்டில் வாகன மாற்றல் தொடர்பில் முச்சக்கர வண்டி மாற்றல் உயர் பெறுமானத்தை பெற்றது எனினும் 2011 ஆம் ஆண்டில் உயா ் மாற்றல் எண்ணிக்கை இடம்பெற்றிருப்பது மோட்டார் கார் மூலமேயாகும். அதன் பெறுபேறாக முச்சக்கர வண்டி மாற்றல்கள் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பதுடன் மொத்த வாகன மாற்றல் எண்ணிக்கையில் குறைந்தளவு முக்கியத்துவம் பெற்றிருப்பது பஸ் மாற்றல்களும் இட வாகன மாற்றல்களுமாகும்.

## 4.3 வேரஹர உப அலுவலகம்

வேரஹர உப அலுவலகத்தின் நடவடிக்கைகள் பின்வரும் பகுதிகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

1. தாபனக் கிளை
2. புதிய சாரதி அனுமதிப்பத்திரக் கிளை
3. சாரதி அனுமதிப்பத்திரங்களை அமுல்படுத்தும் கிளை
4. சாரதி அனுமதிப்பத்திர இணைப் பிரதிகள் கிளை
5. தொழினுட்பக் கிளை
6. வாகன பரிசோதனைக் கிளை
7. சிறாப்பர் கிளை
8. அஞ்சல் கிளை
9. பதிவேட்டறை I/II
10. பரீட்சை மண்டபம்

#### 4.3.1 பதவியினர்

உதவி ஆணையாளர்கள் : திரு.ஜி.எச்.ஆர்.குணவர்தன

திரு.என்.பீ.அமரதுங்க

| <u>**பதவியினர்**</u> | <u>**எண்ணிக்கை**</u> |
|---|---|
| மேற்பார்வையாளர் | 10 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 27 |
| புலனாய்வு, அபிவிருத்தி உதவியாளர் | 05 |
| அபிவிருத்தி உதவியாளர்(வீதிப் பாதுகாப்பு) | 04 |
| அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| மனித வள உதவியாளர் | 01 |
| தரவு பதியுநர் | 02 |
| திணைக்கள எழுதுநர் | 22 |
| மோட்டார் வாகன பரிசோதகர் | 34 |
| சாரதி | 01 |
| காரியாலய காரிய சகாயகர் | 03 |
| அலுவலகத் தொழிலாளி | 07 |
| பதிலீட்டாளர்கள் | 02 |

#### 4.3.2 சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்புற்ற சகல பணிகளும் பிரதானமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹர அமைந்துள்ள உப அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்நடவடிக்கைகள் அம்பாந்தோட்டை, அனுராதபுரம் உள்ளிட்ட ஏனைய மாவட்ட அலுவலகங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையானது திணைக்களம் தாபிக்கப்பட்டதிலிருந்து பல தடவைகளில் காலத்திற்கு ஏற்றவிதத்தில் மாற்றத்திற்கு உட்பட்டு தற்போது வழங்கப்படுகின்ற சருவதேச தரத்தினைக் கொண்ட புதிய ஸ்மாட் அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் வரையில் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த சருவதேச தரத்தினைக் கொண்ட ஸ்மாட் அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் போலியாக

அச்சிடப்படுவதனை தடுக்கும் பொருட்டு உயர் தரத்திலான பாதுகாப்பு உத்திகள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன் அனுமதிபத்திரத்தைக் கொண்டிருப்பவரின் குருதி வகையும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது பிரதானமாக இரு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:

1. On Line (வேரஹர அலுவலகத்தினால் பின்பற்றப்படுகிறது)
2. Off Line (மாவட்ட அலுவலகத்தினால் பின்பற்றப்படுகிறது)

2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களில் காலாண்டு ரீதியான தரவுகளை பின்வரும் அட்டவணைமூலம் காட்டலாம்.


4.3.1 அட்டவணை

| வகை | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மாற்றுதல் | 35,690 | 31,764 | 37,582 | 56,059 | 161,095 |
| திருத்தம் | 253 | 323 | 557 | 768 | 1,901 |
| இணைப் பிரதிகள் | 5,836 | 6,109 | 7,571 | 10,206 | 29,722 |
| வாகன வகுப்புக்களை சேர்த்தல் | 4,375 | 4,004 | 5,149 | 9,645 | 23,173 |
| சருவதேச சாரதி அனுமதிப்பத்திர மாற்றுதல் | 738 | 731 | 1,151 | 1,281 | 3,901 |
| புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 16,250 | 14,553 | 20,030 | 35,354 | 86,187 |
| புதுப்பித்தல் | - | - | - | 6 | 6 |
| **முழு மொத்தம்** | **63,142** | **57,484** | **72,040** | **113,319** | **305,985** |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

மேற்படி 4.3.1 அட்டவணையின்படி நான்காம் காலாண்டில் 35,354 ஆன புதிய சாரதி அனுமதிப்பத்திர அளவினை வழங்குதல் தொடர்பில் கருத்திலெடுக்கையில் அப் பெறுமானம் ஒக்டோபர் மாதம் 6,198 ஆகவும், நவம்பர் மாதம் 6,488 மற்றும் திசம்பர் மாதம் 22,668 ஆகிய உயர் பெறுமானம் கூட்டுவதன்மூலம் உருவாகியுள்ளது. வருடம் முழுவதும் 5000 – 7000 எண்ணிக்கை வித்தியாசத்தினுள் வழங்கப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திர அளவானது திசம்பர் மாதம் உயர் பெறுமானம் ஒன்றை காட்டக் காரணம், கம்பஹா, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய மாவட்ட அலுவலகங்களினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர அளவினையும் கூட்டுவதன்மூலமேயாகும்.

4.3.1 வரைபடம்:- வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர அளவு




மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

### 4.4 தொழினுட்ப சேவைகள்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தொழினுட்ப சேவைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகள் தொழினுட்பக் கிளையினால் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பணியானது, இலங்கை தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகன பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்படுகிறது. உதவி ஆணையாளர் (தொழினுட்பம்), 05 பிரதான மோட்டார் வாகன பரிசோதகர்கள், 61 மோட்டார் வாகன பரிசோதகர்கள் ஆகியோர்களை இது உள்ளடக்கியுள்ளது. தொழினுட்ப சேவை பொருட்டு இந்த மோட்டார் வாகன பரிசோதகர்கள், பிரதான அலுவலகத்திலும் வேரஹர உப அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

தொழினுட்ப சேவை தொடர்பில் பிரதான அலுவலகத்தினாலும், வேரஹர உப அலுவலகத்தினாலும், சகல மாவட்ட அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை பொதுவாக பின்வருமாறு காட்டலாம் :

- மோட்டார் வாகனச் சட்டத்தின்படி சட்டதிட்ட, ஒழுங்குவிதிகளை தயாரித்தலும் திருத்தலும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பில் எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சைகளை நடாத்துதல்.
- வாகனங்களை பரீட்சித்துப்பார்த்து நிறை சான்றிதழ் வழங்குதல், திருத்தும் சான்றிதழ், அடையாள சான்றிதழ் வழங்குதல்.
- அரச வாகனங்கள் பொருட்டு தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.
- கேள்விச் சபை பொருட்டு பங்குபற்றுதல், வாகனங்களை ரத்துச்செய்தல், ஏல விற்பனைக்கு முன் மதிப்பீடு செய்யும் முகமாக உரிய சபைகளில் பங்குபற்றுதல்.

- தொழினுட்ப கராஜ்(வாகன திருத்துமிடங்களை) பதிவுசெய்தலும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தலும்.
- CMT செசி இலக்கங்களையும், இழுவை செசி இலக்கங்களையும் வழங்குதல்.
- சாரதி போதனை பாடநெறிகளையும் ஏனைய பயிற்சித்திட்டங்களையும் தயாரித்து செயற்படுத்துதல்.
- பாரதூர விபத்துக்கள் தொடர்பில் வாகனங்களை பரீட்சித்துப்பார்த்து அவதானிப்புக்களை நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல்.

பிரதான அலுவலகம் உள்ளிட்ட ஏனைய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழினுட்ப சேவைகளை பிரதான இருபது(20) வகுதிகளின் கீழ் பிரித்துக் காட்டலாம் என்பதுடன் அந்த ஒவ்வொரு வகுதிக்குரிய எண்ணிக்கையிலான தரவுகளை பின்வரும் 4.3.2 அட்டவணைமூலம் சுருக்கம்செய்து கீழுள்ளவாறு காட்டலாம்.

**4.4.1 அட்டவணை**

| | பணி | அளவு-2011 |
|---|---|---|
| 01. | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையை நடாத்துதல் | 77,996 |
| 02. | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயல்முறைப் பரீட்சையை நடாத்துதல் | 76,539 |
| 03. | இலக்க தகடுகளை வழங்குதல் (கொழும்பு) | 356,856 |
| 04. | இலக்க தகடுகளை வழங்குதல் (வெளிப் பிரதேசம்) | 183,874 |
| 05. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை சோதனை செய்தல் | 243 |
| 06. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை பதிவுசெய்தல் | 243 |
| 07. | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை புதுப்பித்தல் | 805 |
| 08. | சாரதி பாடசாலைகளை சோதனை செய்தல் | 46 |
| 09. | மாதிரி படிவங்களை வழங்குதல் | 375 |
| 10. | CMT செசி இலக்கங்களை வழங்குதல் | 25 |
| 11. | இழுவை செசி இலக்கங்களை வழங்குதல் | 108 |
| 12. | சுங்க ஏலவிற்பனை வாகனங்கள் பொருட்டு CMT செசி இலக்கங்களை வழங்குதல் | 3,888 |
| 13. | மோட்டார் சைக்கிள்களை சோதனை செய்தல் | 2,112 |
| 14. | புதிய மோட்டார் சைக்கிள்களை கணனியில் பதிதல் | 253,376 |
| 15. | நிறை சான்றிதழ் வழங்குதல் | 12,514 |

| | | |
|---|---|---|
| 16. | அடையாள சான்றிதழ் வழங்குதல் | 1,754 |
| 17. | தடையுத்தரவு வழங்குதல் | 1,765 |
| 18. | தடையுத்தரவை நீக்குதல் | 1,984 |
| 19. | வாகன விபத்துக்களை சோதனை செய்தல் | 4,751 |
| 20. | விசேட கடமை பொருட்டு பங்குபற்றுதல் | 222 |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

## 4.5 புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்துதல்.

சூழல் மாசுறலுக்கு வழிவகுக்கும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் 2008 சனவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/17 இலக்கமுடைய அதி விசேட கசெற் கட்டளை மற்றும் 2009 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் ஆகியவற்றுக்கமைய 2008 நவம்பர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் புகைக் கசிவு பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு இரண்டு (02) தனியார் கம்பனிகள் நியமிக்கப்பட்டிருப்பதுடன் அந்தக் கம்பனிகளினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும். வாகனத்தின் வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

புகைக் கசிவு பரிசோதனை பணியானது ஆரம்பத்தில் வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது முதல் பதிவிலிருந்து மூன்று (03) வருடங்கள் வரையில் இந்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட புத்தம் புதிய வாகனங்கள் (Brand New Vehicles ) பொருட்டு புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றதாய் இருந்தது. இது, 2011.02.01 ஆம் திகதியிலிருந்து அது முதல் வருடம் வரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1975 திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் இந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் பொருட்டு வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றது. இதற்கு மேலதிகமாக, சகல விவசாய வாகனங்கள் பொருட்டு வருடாந்த வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்போது புகைக் கசிவு பரிசோதனை சான்றிதழை சமர்ப்பித்தல் அவசியமற்றது. புகைக் கசிவு பரிசோதனை பணிகளை ஒழுங்குபடுத்தும் முகமாக புகைக் கசிவு செயற்றிட்ட அலுவலகமொன்று பேணப்படுவதுடன் அதன் பதவியினர் பின்வருமாறு.

பணிப்பாளர் - புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டம்

கணக்காளர் - புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டம்

மோட்டார் வாகன பரிசோதகர் - 01

திணைக்கள எழுதுநர் - 01

<u>**பகுதியின் தொழிற்பாடுகள்**</u>

வாகன புகைக் கசிவு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பொது மக்களை விழிப்பூட்டுதல், உரிய சுற்றறிக்கைகளை வெளியிடுதலும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், வாகன முகாமைப்படுத்தல், வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன புகைக் கசிவு செயற்றிட்ட அலுவலகத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

புகைக் கசிவு நடவடிக்கைகளில் தற்போது எழுந்துள்ள பிரச்சினையாக இருப்பது, உரிய கம்பனிகளின் சில நிலையங்கள் புகை வெளியேற்றும் வாகனங்கள் பொருட்டு வஞ்சகமாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதேயாகும். புகைக் கசிவு நடவடிக்கைகளை மிகவும் சிறந்த முறையில் மேற்பார்வை செய்யும் முகமாக வீதிப் பரிசோதனையை விஸ்தரிப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நெடுஞ்சாலைகளில் புகைப் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய யந்திரங்கள் அளவினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இங்கு புகைச் சான்றிதழுடனான வாகனமேனும் நெடுஞ்சாலைகளில் புகை வெளியேற்றி ஓடும் சந்தர்ப்பங்களில் அவற்றை நிறுத்தி சோதனை செய்வதற்கும், அத்தகைய வாகனங்கள் தொடர்பில் தொலைபேசி தகவல் கிடைக்குமிடத்து அவற்றை வரவழைத்து சோதனை செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் பொது மக்கள் எதிர்பார்க்கின்ற சேவையை புகைப் பரிசோதனைமூலம் வழங்க முடியும் என திணைக்களம் எதிர்பார்க்கிறது.

## 5 வருமானங்களும் செலவினங்களும் - 2011

### 5.1 கணக்குக் கிளை

பிரதான கணக்காளர் : திருமதி.டி.எஸ்.ஆர்.கே.குணதிலக

கணக்காளர் : திரு.டி.கே.எம்.ஆர்.குமாரசிறி

மேற்பார்வையாளர் : திருமதி எல்.ஜி.எஸ்.மங்கலிகா

| **பதவியினர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| புலனாய்வு,அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| புலனாய்வு உதவியாளர் | 02 |
| கணக்கு உதவியாளர் | 01 |
| திணைக்கள எழுதுநர் | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 14 |
| காரியாலய காரிய சகாயகர் | 03 |
| அலுவலகத் தொழிலாளி | 02 |
| சாரதி | 01 |

**பகுதியின் தொழிற்பாடுகள்**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் சகல அலுவலர்கள் பொருட்டான சம்பளம், மேலதிக நேரம், பிரயாணச் செலவு, கடன் முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கை, திணைக்களத்திற்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்தல், சகல உபகரண மற்றும் கட்டட பழுதுபார்த்தல் நடவடிக்கை, வருமான செலவினம் தொடர்பிலான சகல கணக்கு நடவடிக்கை, கணக்காய்வு விசாரணை மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு உரிய நடவடிக்கை பொருட்டு அறிக்கை சமர்ப்பித்தல், வருமானங்களை சேகரித்து கணக்குகளில் பதிதல், பொது திறைசேரிக்கு பணம் அனுப்புதல், நிதி ஒழுங்குவிதி 135 இன் கீழ் தத்துவங்களை கையளித்தலுக்கு ஏற்புடைய நடவடிக்கைகள் என்பன கணக்குகள் கிளையின் தொழிற்பாடுகளாகும்.

### 5.2 சொகுசு வரிக் கிளை

கணக்காளர் : திருமதி.ஐ.ஜீ.எஸ்.எஸ்.சிறிமான்ன

மேற்பார்வையாளர் : திரு.பி.ஜி.ஏ.டி.போல்

| **பதவியினர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| புலனாய்வு உதவியாளர் | 01 |
| திணைக்கள எழுதுநர் | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| காரியாலய காரிய சகாயகர் | 01 |

**<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>**

1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களின் கீழ் சொகுசு, பகுதியளவில் சொகுசு, இரட்டை பயன்பாட்டு பகுதியளவில் சொகுசு வரி அறவிடுதல், வரி அறவிடுகின்ற காப்புறுதி நிறுவனங்களை முகாமைசெய்தலும் வழிகாட்டுதலும், வரிக் கொடுப்பனவு தொடர்பில் வாகன உரிமையாளர்களை விழிப்பூட்டுதல், நிலுவை வரிகளை அறவிடுதல், வரி செலுத்துதல் தொடர்பில் அந்தந்த வாகனங்கள் பொருட்டு கணனி முறைமையினை பேணுதல், வரி வருமானங்களை பொது திறைசேரிக்கு அனுப்புதல் மற்றும் வருமான அறிக்கைகளை தயாரித்தல்.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுக் கிளை

கணக்காளர் : திரு.ஆர்.கஹதூவ ஆரச்சி

| **<u>பதவியினர்</u>** | **<u>எண்ணிக்கை</u>** |
|---|---|
| அரச முகாமை உதவியாளர் | 03 |
| காரியாலய காரிய சகாயகர் | 02 |

**<u>பகுதியின் தொழிற்பாடுகள்</u>**

திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதான அலுவலகம், உப அலுவலகம் உள்ளிட்ட சகல கிளை அலுவலகங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் இப்பகுதியின் தொழிற்பாடுகளாகும்.

### 5.4 வருமானக் கணக்கு – 2011

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் சேகரிக்கப்படுகின்ற சகல வருமானங்களை மூன்று (03) வகுதிகளின் கீழ் காட்டலாம்.

- ✓ சொகுசு மோட்டார் வாகன வரி
- ✓ மோட்டார் வாகன விற்பனை மீதான வரி
- ✓ மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

**2011 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமும் உண்மையான வருமானமும்.**

5.4.1 அட்டவணை

| **வருமான விபரம் / வருமான தலைப்பு** | **2011 மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா** | **2011 உண்மையான வருமானம் ரூபா** |
|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வரி | 575,000,000.00 | 714,050,018.00 |
| மோட்டார் வாகன விற்பனை மீதான வரி | 32,000,000.00 | 42,289,200.00 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் | 5,800,000,000.00 | 6,325,878,728.00 |
| **மொத்த வருமானம்** | **6,407,000,000.00** | **7,082,217,946.00** |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

2011 ஆம் ஆண்டில் சொகுசு மோட்டார் வாகன வரியை உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும்போது 124% ஆல் உயர்வடைந்துள்ளதுடன் மோட்டார் வாகன விற்பனை மீதான வரி 132% ஆல் உயர்வடைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள், உண்மையான வருமானத்தை விட 9% ஆல் உயர்வடைந்துள்ளதுடன் அதன் பெறுபேறாக மொத்த உண்மையான வருமானம் 2011 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 110% ஆல் உயர்வடைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் மொத்த உண்மையான வருமானத்தின் அதிகரிப்பு 181% ஆகும்.

## 5.5 செலவினக் கணக்கு – 2011

5.5.1 அட்டவணை

| **செலவின விபரம் / செலவின தலைப்பு** | **2011 மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா** | **2011 உண்மையான செலவினம் ரூபா** |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 752,450,000.00 | 1,788,592,500.00 |
| மூலதன செலவினம் | 822,500,000.00 | 1,054,991,905.00 |
| **மொத்த செலவினம்** | **1,574,950,000.00** | **2,843,584,405.00** |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம

2011 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூ. 1,574,950,000.00 ஆக இருந்ததுடன், ஆண்டில் உண்மையான செலவினம் ரூ. 2,843,584,405.00 ஆகும். அந்த செலவினங்களை மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதன செலவினம் என இரண்டு பிரதான செலவினத் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்த முடியும் என்பதுடன் வருடத்தின் உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூ. 1,788,592,500.00 ஆக இருந்ததுடன், வருடத்தின் உண்மையான மூலதன செலவினம் ரூ. 1,054,991,905.00 ஆகும்.

### 5.5.1 நிதிசார் முன்னேற்றம் (மூலதன செலவினம்)

5.5.2 அட்டவணை : மூலதன செலவின அறிக்கை - 2011(சனவரி – திசம்பர்)

| செலவின தலைப்பு | விபரம் | பெறுமதி (ரூ.ச.) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|
| **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | |
| 307-02-01-2001 | கட்டடமும் நிருமாணிப்புக்களும் | 859,110.24 | 85% |
| 307-02-01-2002 | பொறியும் இயந்திரமும் | 809,397.53 | 53% |
| 307-02-01-2003 | வாகனங்கள் | 197,645.19 | 9.8% |
| **மூலதன சொத்து கொள்ளல்** | | | |
| 307-02-01- | தளபாடமும் அலுவலக உபகரணமும் | 4,376,283.21 | 87.5% |
| 307-02-01-2103 | பொறியும் இயந்திரமும் | 8,253,468.26 | 82.5% |
| **இயலளவு கட்டியெழுப்புதல்** | | | |
| 307-02-01-2401 | பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும் | 292,250.00 | 9.7% |
| **கட்டடமும் நிருமாணிப்புக்களும்** | | | |
| 307-02-01-09- | வேரஹர உத்தேச கட்டடத்தை கொள்ளல் | 20,688,227.70 | 98% |
| 307-02-01-10- | பிரதேசச் செயலகங்களில் பிராந்திய அலுவலகங்களை உருவாக்குதல் | 37,447,640.67 | 85% |
| **பிற மூலதன சொத்துக்கள்** | | | |
| 307-02-01-01- | சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுதல் | 982,067,882.22 | 99% |

மூலம் :- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

## 5.6 நிருமாணம் தொடர்பிலான மூலதன செலவு செயற்றிட்டங்கள்

- வேரஹர உப அலுவலகத்தின் பதிவேட்டறை ரூ. 563.4 மில்லியன் செலவுசெய்து நிருமாணிக்கும் திட்டத்தை ஆரம்பித்தல்.

- ரூ. 18.8 மில்லியன் செலவுசெய்து பிரதான அலுவலகத்தின் உண்டிச்சாலையை நவீனமயப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பித்தல்.

- ரூ. 11.61 மில்லியன் செலவுசெய்து காலி மாவட்ட அலுவலக (ஈ கோட்ஸ்) கட்டடத்தின் ஒரு பகுதி நவீனமயப்படுத்துதல்.

- புத்தளம் மாவட்ட அலுவலக கட்டடத்தை நிருமாணிக்கும் வேலைகள் ரூ. 9.19 மில்லியன் செலவுசெய்து முடித்துள்ளதுடன் உள்ளக செயன்முறை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- ரூ. 53.34 மில்லியன் செலவுசெய்து நுவரெலியா மாவட்ட அலுவலக கட்டட நிருமாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- ரூ. 35.22 மில்லியன் செலவுசெய்து அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலக நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.

- ரூ. 7.34 மில்லியன் செலவுசெய்து வவுனியா மாவட்ட அலுவலக கட்டடத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தியுள்ளதுடன் உள்ளக செயன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

- மட்டக்களப்பு மாவட்ட அலுவலகக் கட்டடம் ரூ. 8.20 மில்லியன் செலவுசெய்து முடிவுறுத்தியுள்ளதுடன் உள்ளக செயன்முறை நடவடிக்கைகள் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- குருணாகல் மாவட்ட அலுவலகத்தின் உள்ளக செயன்முறை நடவடிக்கைகள் ரூ. 10.65 மில்லியன் செலவுசெய்து முடிவுறுத்துதல்.

- கம்பஹா மாவட்ட அலுவலக நிருமாண வேலைகள் முடிவடைந்துள்ளதுடன், ரூ. 10.90 மில்லியன் செலவுசெய்து முடித்துள்ளதுடன், உள்ளக செயன்முறை நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.

**வாகன புதிய பதிவுக் கட்டணம் - 2011**

| வாகன வகுப்பு | பதிவுக் கட்டணம்<br>ரூ. | இலக்க தகட்டுக் கட்டணம் | நிறைச் சான்றிதழ் கட்டணம் | அஞ்சல் கட்டணம்<br>ரூ. | மாற்றல் கட்டணம்<br>ரூ. | தண்டப்பணம் சுங்கத்திலிருந்து விடுவித்த திகதி முதல் | |
|---|---|---|---|---|---|---|---|
| மோட்டார் கார் | CC =1600, 15,000/-<br>CC>1600, 20,000 | 3 ,300/- | 500/- | 50/- | 7,750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,500/<br>10,000/-<br>15,000/-<br>25,000/- |
| இரட்டை பயன்பாட்டு வாகனம் | 15,000/- | 3,300/- | 500/- | 50/- | 7750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,500/-<br>10,000/-<br>15,000/-<br>25,000/- |
| மோட்டார் லொறி | 3000/- | 3300/- | 500/- | 50/- | 3,750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 4,000/-<br>5,000/-<br>6,800/-<br>7,800/-<br>9,800/- |
| மோட்டார் பஸ் | 3,000/- | 3,300/- | | 50/- | 3,750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 7,000/-<br>8,400/-<br>9,500/-<br>10,500/-<br>13,500/- |
| விசேட பணி வாகனம் | 20,000/- | 3,300/- | 500/- | 50/- | 2,800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 3,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/-<br>10,000/- |
| அம்பியுலன்ஸ் | 10,000/- | 3,300/- | 500/- | 50/- | 1,800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>4,000/-<br>4,500/- |
| அமங்கல வாகனம் | 10,000/- | 3,300/- | 500/- | 50/- | 18,00/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 6,000/-<br>7,000/-<br>8,000/-<br>9,000/-<br>10,000/- |
| லொறி இழுவை | 7,500/- | 3300/- | 500/- | 50/- | 3,100/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 5,000/-<br>6,000/-<br>7,000/-<br>8,000/-<br>9,000/- |
| இட வாகனம்/ திரக்டர் 4 சக். | 7,000/- | 3,300/- | 500/- | 50/- | 2,060/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,750/-<br>4,500/-<br>6,000/-<br>7,000/-<br>800/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கை திரக்டர் 4 சக். | 1,500/- | 2,400/- | 500/- | 50/- | 1,150/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 1,750/-<br>2,000/-<br>2,500/-<br>3,500/-<br>5,000/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 6,000/- | 3,300/- | 500/- | 50/- | 2,800/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/-<br>6,000/- |
| பிரயிம்மூவர் | 15,000/- | 3,300/- | 500/- | 50/- | 3,750/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 4,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/-<br>10,000/- |
| மோட்டார் ரயிசிகள் | 2,500/- | 2,800/- | | | 1,200/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,500/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/-<br>6,000/- |
| மோட்டார் சைக்கிள் | 2,000/- | 2,400/- | | | 500/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 1,500/-<br>1,750/-<br>2,000/-<br>2,500/-<br>4,000/- |
| மோட்டார் ரயிசிகள் / வான் | 3,000/- | 2,800/- | | | | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 3,000/-<br>4,000/-<br>5,000/-<br>7,000/-<br>9,000/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 1 500/- | | | 50/- | 1,540/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>3,500/-<br>4,000/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 1,500/- | | | 50/- | 1,540/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>3,500/-<br>4,000/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 1000/- | | | 50/- | 1,150/- | 30நாட். மேல் 2வரு. குறை<br>1வரு. மேல் 2வரு. குறைந்<br>2-3 வரு. இடையில்<br>3-5 வரு. இடையில்<br>5 வரு. மேற்படின் | 2,000/-<br>2,500/-<br>3,000/-<br>4,000/-<br>5,000/- |

**வாகன மாற்றல் கட்டணம் - 2011 (ஒரே நாள் சேவை)**

(ரூபா)

| வாகன வகுப்பு . | மாற்றல் கட்டணம் ரூ. | சொத்தாண்மை உரிமை | | | அடகு | | திருத்த கட்டணம் . |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவுக் கட்டணம் | நீடித்தல் | ரத்துசெய்தல் | பதிவுக் கட்டணம் | ரத்துசெய்தல் | |
| மோட்டார் கார் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இரட்டை பயன்பாட்டு வாகனம் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம் (விவசாய( | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம் (விவசாயமல்லாத) | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| இட வாகனம்/ திரக்டர் சக். | 2060/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| கை திரக்டர் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் சைக்கிள் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் ரயிசிகள் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் ரயிசிகள் /வான் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி / போக் லிப்ட் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் லொறி / பிரயிம்மூவர் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் கோச் | 3750/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 1150/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மோட்டார் அம்பியுலன்ஸ் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| அமங்கல வாகனம் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| லொறி இழுவை | 3100/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 1540/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 1540/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |
| விசேட பணி வாகனம் | 1800/- | 2750/- | 2500/- | 1000/- | 400/- | 500/- | 250/- |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

***காகிதாதிகள்,அஞ்சல் கட்டணம் பொருட்டு ரூ.50 அறவிட**

**வாகன மாற்றல் கட்டணம் - 2011 (சாதாரண சேவை)**

(ரூபா)

| வாகன வகுப்பு . | மாற்றல் கட்டணம் ரூ. | சொத்தாண்மை உரிமை | | | அடகு | | திருத்த கட்டணம் . |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவுக் கட்டணம் | நீடித்தல் | ரத்துசெய்தல் | பதிவுக் கட்டணம் | ரத்துசெய்தல் | |
| மோட்டார் கார் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இரட்டை பயன்பாட்டு | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம் (விவசாய( | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம் (விவசாயமல்லாத) | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| இட வாகனம்/ திரக்டர் சக். | 1200/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| கை திரக்டர் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் சைக்கிள் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் ரயிசிகள் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் ரயிசிகள் /வான் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி / போக் லிப்ட் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் லொறி / பிரயிம்மூவர் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் கோச் | 2500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| ஊனமுற்றோர்களின் வாகனம் | 500/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மோட்டார் அம்பியுலன்ஸ் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| அமங்கல வாகனம் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| லொறி இழுவை | 2000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| திரக்டர் இழுவை/ பவுசர் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மாற்று எரிபொருள் மோட்டார் வாகனம் | 800/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| மின் சக்தியால் இயங்கும் வாகனம் | 800/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |
| விசேட பணி வாகனம் | 1000/- | 1250/- | 500/- | 500/- | 200/- | 300/- | 100/- |

மூலம் : மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

***காகிதாதிகள்,அஞ்சல் கட்டணம் பொருட்டு ரூ.50 அறவிடப்படும்.**

**புதிய சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு ஏற்புடைய மேலதிககட்டணம்**

**(2011)** (ரூபா)

| சேவை | மேலதிககட்டணம் (ரூ) | |
|---|---|---|
| | சாதாரணசேவை | ஒரேநாள் சேவை |
| 1. புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | | |
| ஒரு வாகன வகுப்பு பொருட்டு | 1,700.00 | - |
| இரு வாகன வகுப்புக்கள் பொருட்டு | 2,000.00 | - |
| மூன்று வாகன வகுப்புக்கள் பொருட்டு | 2,250.00 | - |
| 2. புதுப்பித்தல் அல்லது செல்லுபடியான காலத்தை நீடித்தல் | | |
| உரிய திகதிக்கு | 1,700.00 | 2,200.00 |
| தாமதமாகும் ஒவ்வொரு வருடத்துக்கு அல்லது பகுதி பொருட்டு | 250.00 | - |
| 3. சாரதி அனுமதிப்பத்திரத்தின் இணைப்பிரதியை வழங்கல் | 1,700.00 | 2,200.00 |
| 4. சாரதி அனுமதிப்பத்திரத்தின் தகவல்களை திருத்துதல் | 2,000.00 | 2500.00 |
| 5. சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றுதல் | | |
| இருக்கிற சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக புதியசாரதி அனுமதிப்பத்திரம் | 1,700.00 | 2,200.00 |
| வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு பதிலாக புதியசாரதி அனுமதிப்பத்திரம் | | |
| இலங்கை பிரசைகளுக்காக | 2,000.00 | 2,500.00 |
| - வெளிநாட்டு பிரசைகளுக்காக மட்டும் | 10,000.00 | 10,500.00 |
| 6. வெளிநாட்டு பிரசைகளுக்கான புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 15,000.00 | - |
| 7. சாரதி அனுமதிப்பத்திர பிரித்தெடுப்பு | 500.00 | - |
| 8. வெளிநாட்டு பிரசைகளுக்கான வண்டி ஓட்டும்அனுமதிப்பத்திரம் (ஒரு மாதத்துக்கு) | 1,000.00 | - |
| 9.சருவதேச புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 2,000.00 | 2,500.00 |
| 10.எழுத்துப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 250.00 | - |
| 11.செயல்முறைப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 500.00 | - |